# Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyamabdi, Vellore District

Deposition of witness for

| | |
|---|---|
| Name | K.Mohan |
| Father's Name | Krishnamoorthy |
| Village | Tirupattur |
| Taluk | Tirupattur |
| Caste | |
| Calling | Senior Revenue Inspector |
| Religion | Hindu |
| Age | 29 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.02.2019

OS. 170/2015 Name:K.Mohan PW6

**முதல் விசாரணை**

நான் திருப்பத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். இந்த வழக்கில் ஆவணங்க்ள தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரப்பட்டதன் பேரில் வட்டாட்சியரின் அனுமதியின் பேரில அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள வரிசை எண்.4 ஆவணங்கள்மட்டும் எங்கள் அலுவலகத்தில் இருந்ததால் அதன் நகல்களை தாக்கல் செய்கிறேன். நகல்கள் எக்ஸ் .4 முதல் 7 வரை குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண் 1 , வரிசை எண்.3 ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருக்கும் வரிசை எண்.2 ஆவணம் சான்று எண் வழங்கிய அலுவலக எண் கொடுத்தால் மட்டுமே கொடுக்க இயலும், வரிசை எண்.5 உள்ளாட்சி அமைப்பு மற்றும் தேர்தல் பிரிவு அலுவலகத்தில்தான் இருக்கும் வரிசை எண்.6, 7 குறித்து உள்ளாட்சி அமைப்பு மட்டுமே கூற இயலும்.

<u>பிரதிவாதிகள் 13 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை.,</u>

பட்டா எண்.61 ஆனது கைச்சிட்டாவில் உரிமையாளர் வீரபோயன் மனைவி அங்கம்மாள் பெயரில் பதிவு உள்ளது. தற்பொழுது பட்டா எண் 61-க்கு யார் பெயரில் ரசீது செலுத்தப்பட்டு வருகிறது என்றால் வீரபோயன் மகன் கைலாசம். பட்டா எண்.807, வீரபோயன் மகன் பெத்தபோயன் பெயரில் உள்ளது. பட்டா எண்.265 வீரபோயன் மகன் கைலாசபோயன் பெயரில் உள்ளது. பட்டா எண்.1442 வீரபோயன் மகன் பெத்தபோயன், வீரபோயன் மகன் கைலாச போயன் மற்றும் வீரபோயன் மகன் கிருஷ்ணன் பெயரில் உள்ளது. மேற்படி ஆவணத்தில் வில்லங்கம் குறித்து குறிப்பு எதாவது உள்ளதா என்றால் இல்லை.

14ஆம் பிரதிவாதி தான் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கை மாற்றம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளதால் குறுக்குவிசாரணை செய்வதில்லை என்று கூறிவிட்டார்.

<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை.,</u>

சாதாரணமாக சொத்திற்குண்டான வரியை யார் செலுத்தினாலும் பெற்றுக்கொள்ள முடியும் என்றால் ஆமாம். சொத்தை பொருத்து வில்லங்கம் எதாவது ஏற்பட்டால் அதுகுறித்து விவரம் சிட்டா புத்தகத்தில் குறிப்பிடவேண்டும் என்று விதி உள்ளதா என்றால் இல்லை. சாதாரணமாக சொத்தை பொருத்து பட்டா மாறுதலானது கிரையம் பெற்ற நபரோ அல்லது ஆவணத்தின் மூலமாக உரிமை பெற்ற நபரோ மனு செய்தால் மட்டுமே மாற்றம் செய்யப்படும் என்றால் ஆமாம். சில பட்டாக்கள் இறந்தவர் பெயரிலேயே இருக்கும் என்றால் ஆமாம்.

<u>அனுமதியின் பேரில் மறுவிசாரணை.,</u>

சாதாரணமாக கடன் கொடுத்த நிறுவனம் கடன் மற்றும் வில்லங்கம் குறித்து பட்டா பாஸ் புத்தகத்தில் குறிப்பு எழுதவேண்டும். அவ்வாறு குறிப்புஎழுதி அதை 7 நாட்களுக்குள் வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் அந்த குறிப்பினை வட்டாட்சியர் பட்டா பாஸ் புத்தகத்தில் குறிக்கப்படவேண்டும் என்று விதிமுறை உள்ளது என்றால் ஆமாம். சாதாரணமாக வரி ரசீதானது சொத்து யார் பெயரில் உள்ளதோ அவர்கள் பெயரில்தான் வழங்கப்படும் என்றால் ஆமாம்.